


October 2025

# PREMA ANANDA VAHINI

# பிரேம ஆனந்த வாகினி

அக்டோபர் 2025

## பொருளடக்கம்


1. சுவாமிஜியின் சத்சங்கம் ~ உங்களுக்கு உண்மையாக இருங்கள்!

4. ஆசிரமத்தில் நவராத்திரி விழா

8. நினைவஞ்சலி – கஸ்பார்ட்

16. இளைஞர் சங்கச் செய்திகள்


*"ஆன்மிகத்தில் முதன்மையான, முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் வாழும் முறை. நீங்கள் நல்ல வழியில் வாழவில்லை என்றால், உங்கள் ஆன்மிக முன்னேற்றம் தடைபடும்."*

*~சுவாமிஜி*

# சுவாமிஜியின் சத்சங்கம்

## உங்களுக்கு உண்மையாக இருங்கள்!

*(1993, மார்ச் மாதம் சுவாமிஜி வழங்கிய சத்சங்கத்திலிருந்து ஒரு பகுதி)*

எங்கெல்லாம் பூஜைகள் அல்லது அபிஷேகங்கள் செய்யப்படுகிறதோ அந்த இடங்களில் அசைவ உணவுகளை உண்பதை தவிர்ப்பது நல்லது. அபிஷேகம் செய்பவர் சைவ உணவு உண்பவராக இருக்க வேண்டும் என்பது பொதுவான விதி. சில ஆசிரமங்கள் மிகவும் கண்டிப்பானவை. அவர்கள் பிரம்மசாரிகளை மட்டுமே அபிஷேகம் செய்ய அனுமதிப்பார்கள்.



இருப்பினும், நான் அவ்வளவு கண்டிப்பானவன் இல்லை. அசைவ உணவை உண்பது தவறு என்று நான் கூற மாட்டேன். ஆனால், ஒரு ஆன்மிக நிறுவனத்தில், ஒரு ஆன்மிகச் சூழலை உருவாக்குவதற்காக அல்லது நீங்கள் தியானம் செய்யும் இடத்தில் அசைவ உணவு உண்பது சரியல்ல. இது நீங்கள் உயர்ந்த நிலையை அடைவதற்கு தடையாக இருக்கும்.

உங்களுக்கு வாய் இருக்கிறது என்பதற்காக எப்பொழுதும் சாப்பிட்டு கொண்டேயிருக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. என்னை இங்கு வரவழைத்து உட்கார வைத்து பேச வைப்பது உண்மையிலேயே மிகவும் கடினமான வேலை. நான் பேசினால், ஆன்மிகத்தைப் பற்றி மட்டுமே பேசுவேன், இல்லாவிட்டால் அமைதியாக இருப்பதையே நான் விரும்புகிறேன்.

ஆன்மிகத்தைப் பற்றி நீளமாக பேச வேண்டியதில்லை. அதைப் பற்றி பேசுவதற்குப் பதிலாக, ஆன்மிகத்தைப் பயிற்சி செய்யுங்கள். ஆன்மிகத்தில் முதன்மையான, முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் வாழும் முறை. நீங்கள் நல்ல வழியில் வாழவில்லை என்றால், உங்கள் ஆன்மிக முன்னேற்றம் தடைபடும்.

நீங்கள் உலகத்தை ஏமாற்றலாம், உங்களுக்கு நெருக்கமானவர்களை ஏமாற்றலாம், ஆனால் உங்களை நீங்கள் ஏமாற்ற முடியாது. ஆகவே, உங்களுக்கு உண்மையாக இருங்கள்! நீங்கள் உங்களிடம் எப்படி உண்மையாக இருப்பீர்கள்? உங்களுக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என உங்கள் மனதை மாற்றிக் கொண்டாலே போதும்.




என்னிடம் இத்தனை தெய்வீக சக்திகள் இருந்தாலும், நான் பெயர் அல்லது புகழுக்கு ஆசைப்படவில்லை. எனக்கு இவற்றிலெல்லாம் ஆர்வமில்லை. என்னால் வயலில் புல்லை அசைப் போட்டுக் கொண்டிருக்க முடிந்தால் கூட மகிழ்ச்சியாக இருப்பேன். காரணம், நான் மிகவும் எளிமையானவன், இதுதான் எனக்கு பிடிக்கும். ஏன்? ஆன்மிகத்தில் மிகவுயர்ந்த இடத்திற்குச் செல்லும்போது, நீங்கள் மிகவும் பணிவானவராக மாற வேண்டும். பணிவே ஆன்மிகத்தின் மிகவுயர்ந்த நற்குணம். நீங்கள் ஆன்மிகப் பாதையில் செல்லும் போது உங்களிடம் எந்த ஆணவமும் இருக்கக் கூடாது.

ஆகவே, என்னுடைய ஆன்மிகப் பயிற்சியில் பணிவே மிக முக்கியமான அம்சம். அகந்தை குணம் இருப்பவர்களுக்கு நான் ஒரு நல்ல "அடி" கொடுப்பேன். என்னைச் சுற்றியிருப்பவர்களிடம் அகந்தை இருப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். காரணம், அது இருந்தால், அது அவர்களுடைய ஆன்மிக முன்னேற்றத்தைத் தடுக்கும். ஆணவம் இருந்தால் அவர்களால் பக்குவமடைய முடியாது. அனைவரும் பக்குவமடைவதையோ நான் விரும்புகிறேன்.

உங்களிடம் அகங்காரத்தின் ஒரு துளியையும் நான் பார்க்க விரும்பவில்லை. ஆனால் இப்போதோ, உங்களிடம் நிறைய அகங்காரம் இருக்கிறது! அதனால்தான் நான் உங்களை ஆன்மிகப் பாதையில் அழைத்துச் செல்ல விரும்புகிறேன். உங்களிடம் சிறிதளவு அகங்காரத்தைக் கண்டாலும் நான் உங்களைக் கண்டிப்பேன். ஏனென்றால், அதற்கு உங்கள் உள்ளத்தில் நீங்கள் சிறிதும் இடமளிக்கக் கூடாது. அது உங்கள் ஆன்மிகப் பாதையை அழித்து விடும்.

கடவுள் எனக்கு இவ்வளவு தெய்வீக அருளை வழங்கியிருக்கும்போது, நான் இங்கு வந்து அபிஷேகங்கள் செய்வது உண்மையிலேயே அவசியமா? ஆம், ஏனென்றால் நான் இதைச் செய்தால் நீங்களும் செய்வீர்கள். எனவே, என்னால் அபிஷேகம் செய்ய முடியுமென்றால், உங்களாலும் நிச்சயமாகச் செய்ய முடியும்.

சில அவதாரங்களும் துறவிகளும் தாங்கள் சடங்குகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கூறுகிறார்கள். ஆனாலும் பக்தர்கள் இன்னும் அறியாமையிலேயே வாழ்கிறார்கள். சடங்குகளைச் செய்வது தங்களுக்கு நல்லது என்பதை அவர்கள் அறியவில்லை. பின்பற்றுவதற்கு ஒரு முன்மாதிரி கிடைக்கும் போதுதான் அபிஷேகங்களின் மதிப்பை அவர்கள் உணருவார்கள். ஆனால், குருவே அந்த முன்மாதிரியை வழங்கவில்லை என்றால், அவர்களும் அதைச் செய்ய மாட்டார்கள்.

ஆகவே, நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் உங்கள் நிலைக்கு இறங்கி வருகிறேன்.

"இந்த ஆசிரமம் சேவைக்கும் ஆன்மிகத்திற்கும் உரிய ஓரிடமாகும். இது அமைதியான மற்றும் தெய்வீகமான இடம். நீங்களும் சில சமயங்களில் இங்கு வந்து தங்கலாம். நீங்கள் இதற்கு ஆதரவளிக்கலாம். இந்த இடம் உங்களுக்குப் பல வாய்ப்புகளை வழங்குகிறது. இதற்கு ஆதரவளிப்பதன் மூலம், நீங்கள் அந்த வாய்ப்பை மேலும் பலருக்கு வழங்குகிறீர்கள்."

~ சுவாமிஜி



# ஆசிரமத்தில் நவராத்திரி விழா
## செப்டெம்பர் 22~அக்டோபர் 2

நவராத்திரி என்பது அனைத்து தெய்வீக சக்திகளின் ஒருங்கிணைந்த அம்சமான அம்பாளை கௌரவிக்கும் வகையில் கொண்டாடப்படும் ஒரு மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான திருவிழாவாகும்.





இத்தகைய மகத்தான விழாவை, நாங்கள பாரம்பரிய முறைப்படி நவதானியங்கள் விதைக்கப்பட்ட மண்படுகையில் ஒன்பது கும்பங்களை வைத்து ஆரம்பித்தோம்.

வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட, பல அடுக்குகளைக் கொண்டு ஒரு கொலுவை அமைத்தோம். அதில் பல்வேறு கடவுள்கள், தெய்வங்கள், துறவிகள், முனிவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், விலங்குகள் மற்றும் தாவரங்களின் சிலைகளையும் வைத்தோம்.



கொலு



ஒன்பது நாட்களும் இராகு காலத்தில் துர்கைக்கு, எலுமிச்சைப் பழத்தில் ஒன்பது நெய் தீபங்கள் ஏற்றி துர்க்கைப் பூஜை செய்தோம்.





ஒவ்வொரு மாலையும் அம்பாளின் சிலைக்கு வழக்கமான முறையில் அபிஷேகம் செய்யட்டது. மேலும் ஒவ்வொரு நாளும் அவளுக்கு புத்தம் புதிய ஆடைகள் அணிவிக்கப்பட்டு, ஆபரணங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டு, விசேஷ பிரசாதங்களும் படைக்கப்பட்டன.




நவராத்திரியின் ஒன்பதாவது நாளில், நாங்கள் ஆயுத பூஜை செய்தோம். இது சில சமயங்களில் சரஸ்வதி பூஜை என்று அழைக்கப்படுகிறது. இந்த நாள் முதன்மையாக சரஸ்வதி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த நாளில் புத்தகங்கள், பேனாக்கள், பென்சில்கள், இதைக் கருவிகள் மற்றும்

பிற உபகரணங்கள் போன்ற கல்வி சார்ந்த பொருட்களுக்கு ஆசி வழங்கும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. இது அறியாமையின் மீது அறிவின் வெற்றியைக் குறிக்கிறது.

விஜயதசமி என்று அழைக்கப்படும் நவராத்திரியின் கடைசி நாளில், அனைவரும் அம்பாள் சிலையை கைகளில் ஏந்தி, அவளிடமிருந்து சிறப்பு ஆசீர்வாதங்களைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து அன்னைக்கு மிகுந்த பக்தியுடன் ஒரு சக்தி வாய்ந்த மகாபிஷேகம் செய்யப்பட்டது,





இறுதியாக, ஒன்பது கும்பங்களில் இருந்த அபிஷேக நீர் அம்பாள் சிலையின் மீது ஊற்றப்பட்டது.



*அழகிய நறுமணம் மிக்க மலர் மாலைகள், கண்ணைக் கவரும் நகைகள் மற்றும் நவதானியங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட அம்பாள் சிலை.*

“அடுத்தப் பிறவியைப் பற்றி நினைக்காதீர்கள். (...)இப்பிறவியிலேயே நீங்கள் சில நல்ல தர்மகாரியங்களைச் செய்யுங்கள், நல்ல சத்சங்கங்களில் கலந்து கொள்ளுங்கள், நல்ல இதயத்துடன் வாழுங்கள், மற்றவர்களைக் குறைக் கூறாதீர்கள், மற்றவர்களிடம் அன்புடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்ளுங்கள், அன்புடன் வாழுங்கள்.



பொறுமை மிகவும் அவசியம். யாரேனும் தவறு செய்து விட்டால், பரவாயில்லை அது இறைவன் சித்தம் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

உங்களை நீங்களே மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். உங்களை நீங்களே நம்ப வேண்டும். உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். பலரும் தங்களைத் தாங்களே நம்பவதில்லை. தங்களையே சந்தேகிக்கிறார்கள்.

உங்களுக்கு ஒரு நல்ல இதயம் இருக்கிறது, நீங்கள் ஒரு நல்ல மனிதர், நீங்கள் ஒருபோதும் உங்களையே ஏமாற்ற மாட்டீர்கள். உங்கள் இதயம் எப்போதும் உங்களுக்கு நன்மை செய்யும் என்று நீங்களே உங்களுக்குச் சொல்லிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் உங்களுக்கு நல்லவர்களாக இருக்கிறார்களா என்பதை விட, நீங்கள் உங்களுக்கு நல்லவராக இருப்பதுதான் முக்கியம். எனவே, எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் உங்களை நம்ப வேண்டும்.”

# நினைவஞ்சலி – காஸ்பார்ட்



சுவாமிஜியுடன் காஸ்பார்ட்

கடந்த மாதம், செப்டெம்பர் 30 அன்று, சுவாமிஜியின் நீண்டகால, அர்ப்பணிப்பு மிக்க பக்தரான காஸ்பார்ட், காங்கோ பிராசவில்லில் உள்ள தனது இல்லத்தில் அமைதியான முறையில் காலமானார். காஸ்பார்ட் 2018 – ல் தனது சொந்த ஊருக்குத் திரும்புவதற்கு முன்பு, கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகள் ஆசிரமத்தல் வசித்து வந்தார். ஆசிரமத்தில் வசித்த காலத்தில் அவர் பல்வேறு சேவைகளைச் செய்து வந்தார். மேலும், அவர் எப்போதும் அனைவருக்கும் உதவத் தயாராக இருந்தார்ஹ அந்த உதவிகளை அவர் தன்னலமற்ற அன்புடன் செய்தார். அவர் சுவாமிஜியிடமிருந்து ‘ஆப்பரிகானந்தா’ என்ற ஆன்மிகப் பெயரைப் பெற்றார்.

துன்பங்களையும் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளையும் எதிர்கொண்ட போதிலும், அவர் சுவாமிஜியின் மீதும் இறைவனின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தனது நாட்டில் சுவாமிஜியின் செய்தியைப் பரப்புவதைத் தொடர்ந்தார். அவரை அறிந்த அனைவராலும் அவர் எப்போதும் அன்புடன் நினைவுகூரப்படுவார். சுவாமிஜியின் ஆசிகளுடன் அவரது ஆன்மா அமைதியிலும் அன்பிலும் இளைப்பாற நாங்கள் பிரார்த்திக்கிறோம்.




“டி எல் ஆஃப்ரீக் ஆ ல் இன்டெ: வொயேஜ் ஸ்பிரிச்சுவல் டி’அன் ஆஃப்ரிகன்” (ஆப்பரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு: ஒரு ஆப்பிரிக்கரின் ஆன்மிகப் பயணம்) என்ற நூலிலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நாங்கள் உங்களுக்காக பிரெஞ்சு மொழிலிருந்து இங்கு மொழிபெயர்த்துள்ளோம்.

## சுவாமி பிரேமானந்தாவுடனான எனது முதல் நேர்காணல்

சுவாமி பிரேமானந்தாவுடனான எனது நேர்காணல, பூஜை மண்டபத்தில் அன்னைக்குரிய சடங்குகள் முடிந்த பிறகு, அடுத்த நாள் மாலை சுமார் எட்டு மணியளவில் நடைபெற்றது. சுமார் முப்பது பேர் பொறுமையுடன் தங்கள் முறைக்காகக் காத்திருந்து வரிசையில் நின்று கொண்டிருந்தனர். இந்தத் தனிப்பட்ட நேர்காணல்களுக்காக ஒதுக்கப்பட்ட அறைக்கு ‘அருள்வாக்கு’ அறை என்று பெயரிடப்பட்டிருந்தது. இது அங்கு நடைபெறும் நிகழ்வின் தன்மையைக் குறிக்கும் ஒரு தமிழ்ச் சொல்லாகும். அது உண்மையில் ஒரு அறையல்லஹ கிருஷ்ணர், அம்மன், விநாயகர் சிலைகளுக்கு பூஜை நடைபெறும் மூலஸ்தானத்திற்கு நேர் பின்னால் அமைந்திருந்த ஒரு அரைவட்ட வடிவ நடைப்பாதை அது.

இடது பக்கத்தில் இருந்த ஒரு கதவு வழியாக ஒருவர் அரைவட்ட வடிவ நடைப்பாதையில் நுழைந்து, நேர்காணல் முடிந்ததும், வலது பக்கத்தில் இருந்த மற்றொரு கதவ வழயாக வெளியேறினார். அந்த நடைப்பாதைச் சுவரின நடுவில் – நீங்கள் நடந்து செல்லும்போது இடது பக்கத்தில் – சுமார் ஒன்றரை சதுர மீட்டர் அளவுள்ள ஒரு திறப்பு, ஒரு சாளரம் போல் இருந்தது. இந்தச் சாளரம் ஒரு சிறிய அறைக்குள் பார்த்தவாறு இருந்தது. அந்த அறையில் சுவாமி ஒரு கைபிடியுள்ள நாற்காலியில், அந்தத் திறப்பை நோக்கியபடி அமர்ந்திருந்தார். அவரைத் தனியாகச்

சந்திக்க விரும்பிய நபருக்கும் அவருக்கும் இடையே ஒன்றை மீட்டர் உயரமுள்ள தாழ்வான சுவர் ஒன்றிருந்தது.

அந்த மென்மையான ஒளி நிறைந்த அறையில் இருப்பது, அந்தத் தருணத்தின் உணர்ச்சியால் தொண்டையில் ஒரு முடிச்சு ஏற்பட்டிருந்த போதிலும், நேசிப்பவர் ஒருவருடன், நீங்கள் நம்பி உங்கள் இதயத்தைத் திறந்து பேசக் கூடிய ஒருவருடன் இருப்பது போன்ற உணர்வைத் தந்தது. சுவாமியின் குரலைக் கேட்பதே எற்கனவே மனதுக்கு ஆறுதலாக இருந்தது. அவர் மென்மையாகவும் நம்பிக்கையூட்டும் விதமாகவும் பேசினார். நேர்காணலின் முடிவில், அவர் அந்த நபருக்கு சில விபூதிப் பொட்டலங்களைக் கொடுத்து ஆசீர்வாதம் மற்றும் பிரியாவிடை தெரிவிக்கும் விதமாகத் தன் கைகளைக் கூப்பி, அடுத்தவர் உள்ளே வரலாம் என்பதைக் குறிக்கும் வகையில் ஒரு சிறிய மணியை ஒலிப்பார்.

சில சமயங்களில் சுவாமி ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்காமல் போகலாம். அதனால், அந்த நபர் நேர்காணலில் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வார். இருப்பினும், பின்னர் தவிர்க்க முடியாமல் அவர்களின் மனதில் ஒரு தெளிவு பிறக்கும். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அல்லது எதிர்பாராத ஒரு நிகழ்வு குறுக்கிட்டு, அவர்களைத் தொந்தரவு செய்த பிரச்சினையையோ அல்லது குழப்பத்தையோ தீர்த்து வைக்கும். மேலோட்டமாகப் பார்க்கும்போது எளிமையாகத் தோன்றினாலும், அவருடைய கருத்துக்கள் எப்போதும் ஆழ்ந்த அர்த்தம் கொண்டவையாக இருந்தன. மேலும், குழப்பமாகத் தோன்றிய விஷயங்களை அவை தெளிவுப்படுத்தின. மற்ற நேரங்களில் அவர் தெளிவாகவும் நேரடியாகவும் பேசி, நேரடியான அறிவுரைகளையும் ஊக்கத்தையும் வழிகாட்டுதலையும் வழங்கினார்.

இறுதியாக என் முறை வந்தது. ஒரு இளம் ஐரோப்பியப் பெண் மொழிப் பெயர்ப்பதற்காக என்னுடன் வந்தார். சுவாமி தனது எளிய ஆங்கிலத்தில், கடவுளைத் தேடுவதன் மூலம் பரம ஆனந்தத்தைக் காண விரும்பும் எனது பேராவலுக்காக எனக்கு வாழ்த்து தெரிவித்து பேசத் தொடங்கினார். அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். நேர்காணல் தொடங்கி இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்குப் பிறகு, திடீரென்று விவரிக்க முடியாத ஒன்று நடந்தது. என்னால் சுவாமி பிரேமானந்தாவைப் பார்க்க முடியவில்லை! அவருடைய குரலைக் கேட்க முடிந்தது. ஆனால், அவருடைய சரீரத்தின் உருவத்தை என்னால இனங் கண்டு கொள்ள முடியவில்லை. அவர் ஒரு ஒளி ஊடுருவும் தன்மை கொண்டவராகத் தோன்றினார் என்னால் ஒரு வித, மங்கலான நிழலை மட்டுமே பார்க்க முடிந்தது. எனக்கும் அவருக்கும் இடையில் 30 சென்டிமீட்டர் தூரம் மட்டுமே இருந்தது என்றால், நினைத்துப் பாருங்கள்! நான் என் மொழிபெயர்ப்பாளரைத் திரும்பி பார்த்தேன். ஆனால், அங்கே என்ன நடக்கிறது என்று அவளுக்குத் துளியும் தெரியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

அந்தத் தருணத்தில், வேறொருவரிடமிருந்து இடைவிடாமல் சொட்டும் எண்ணெயைத் தாங்கும் ஒரு பாத்திரம் போல் நான் உணர்ந்தேன்ஹ அவருடைய வார்த்தைகள் இயல்பாக என் மனதில் பாய்ந்து நிலைத்தன. அதனால அவை மொழிப் பெயர்க்கப்படுவதை விட வேகமாக என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இதில் எந்த சந்தேகமும் இல்லை — என்னால் அவரை இனிப்பார்க்க முடியவில்லை. நான் அவருடைய குரலைக் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் அவர் அமர்ந்திருந்த இடம் முற்றிலும் காலியாகத் தோன்றியது. ஒருவித



அருள்வாக்கு அறையில் சுவாமிஜி

எரிச்சலான வெப்ப உணர்வு என் உடல் முழுவதும் பரவியது. இது அன்றயை மிக அதிக வெப்பநிலையால் ஏற்பட்டிருக்க முடியுமா? இல்லை, அது சந்தேகத்திற்கிடமின்றி ஒரு உணர்ச்சிதான் இந்த சுவாமி ஒரு சாதாரண உடலைக் கொண்ட மனிதர் அல்ல, மாறாக அவர் 'ஆவி' என்பதை உணர்ந்தபோது ஏற்பட்ட பெரும் ஆச்சரியமே அது! எதுவுமே விசேஷமாக நடக்காததது போல அவர் என்னிடம் தொடர்ந்து பேசினார். என் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். மொழிப்பெயர்ப்பு கூடத் தேவையின்றி, என் ஆன்மிக வளர்ச்சியில் பல்வேறு தடைகள் இருக்கும் என்பதையும் அவருடைய உதவியால் மட்டுமே அவற்றை நான் கடந்து செல்ல முடியும் என்பதையும் நான் புரிந்து கொண்டேன் என்று நினைக்கிறேன். கஷ்ட காலங்களில் நம்பிச் சார்ந்திருக்கக் கூடிய, நம்பிக்கைக்குரிய ஒரு ஆன்மிக குருவின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

நான் சாளரத்தின் கீழ் விளிம்பைப் பார்த்தேன். அங்கே அவர் குறுக்காக வைத்திருந்த இரண்டு கைகளும் தெரிந்தன. நான் அவற்றைத் தொட முயன்றேன். ஆனால் எனக்கு பெரும் ஆச்சரியமாக, அவருடைய கைகளுக்கு எந்தத் திடத்தன்மையும் இல்லை. அங்கே முழுமையான வெறுமை மட்டுமே இருந்தது! வெறும் காற்றுத்தான்! என் கைகள் ஜன்னலரின் விளிம்பை மட்டுமே தொட்டன. ஆனால், அவருடைய கைகள் மிகவும் நிஜமாகத் தெரிந்தன! அதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பி, நான் மீண்டும் அவற்றைத் தொட முயன்றேன். ஆனால், இந்த இரண்டாவது முயற்சியும் தோல்வியடைந்தது. உறுதியுடன், மூன்றாவது முயற்சியில் நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் என்று நினைத்து, இந்த முறை என் இரண்டு கைகளாலும் அவருடைய கைகளை மிகவும் உறுதியாக அழுத்தினேன். ஆனாலும் என்னால் அவற்றை உணரவோ தொடவோ முடியவில்லை. ஒரு படியைத் தவறவிட்டது போல நான் என் சமநிலையையும் இழந்தேன். என் கவனக்குறைவை அறிந்தவர் போல் சுவாமி பிரேமானந்தா என்னைக் கவனம் செலுத்துமாறு நினைவுப்படுத்தினார்.

நம்பமுடியாத விதமாக, என்னால் அவருடைய கைகளைத் தொடவே முடியவில்லை. எங்களைச் சுற்றி எல்லாம் சாதாரணமாகத் தோன்றினாலும், சுவாமி பிரேமானந்தா ஒரு தெளிவற்ற நிழலாக, ஒரு வெற்றிடமாகவே இருந்தார்! நேர்காணலின் இறுதியில்தான், ஆரம்பத்தில் நான் பார்த்தது போலவே அவரை மீண்டும் பார்க்க முடிந்தது. அவர் எனக்கு மேலும் சில ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி அழைத்தார். "சுவாமி" என்று நான் தொடங்கினேன். "நான் உங்கள் ஆசிரமத்திற்கு வந்ததற்கான காரணங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நான் சாய்பாபாவின் ஆசிரமத்தில் இருந்தேன். அங்கிருந்து மாதா அமிர்தானந்தமயி ஆசிரமத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், இங்கே வந்து விட்டேன். இப்போது நீங்கள் இங்கே தங்குவதற்கு எனக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள்..."

அவர் குறுக்கிட்டு, "ஆமாம், நீங்கள் சாய்பாபா ஆசிரமத்திற்குச் சென்றிருக்கிறீர்கள், அது நல்லது. நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள், அதுவும் நல்லது, ஆன்மிகத்தைப் பற்றி அறிந்து கொள்ள இவை நல்ல இடங்கள். இப்போது நீங்கள் அமிர்தானந்தமயியிடம் செல்ல வேண்டும். பிறகு உங்கள் இதயம் சொல்வதைக் கேளுங்கள்" என்றார்.

இந்த மூன்று ஆசிரமங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சற்று மனச்சோர்வை ஏற்படுத்தியது. ஸ்ரீ சத்யசாய் பாபா ஆசிரமத்தில், சாய்பாபாவுடன் எனக்கு எந்தத் தொடர்பும் ஏற்படவில்லையே என்ற ஏமாற்றத்தை நான் உணர்ந்திருந்தேன். இப்போது இந்த ஆசிரமத்திற்கு நான் பழகிக் கொண்டிருந்தேன். அந்த இடம் எனக்குப் பிடித்திருந்தது. அங்கு கூட்டம் குறைவாகவும் விசாலமாகவும் இருந்தது.

மேலும், முந்தைய நாள் சுவாமி பிரேமானந்தா உடனடியாக என் கவலைகளைப் போக்கியிருந்தார். நான், "சுவாமி, நான் சத்யசாய் பாபா ஆசிரமத்திற்குச் சென்று என் பெட்டியை எடுத்துக் கொண்டு திரும்பி இங்கு வருகிறேன்." என்று கூறினேன்.

"கவனியுங்கள்" என்று அவர் பதிலளித்தார். "மனம் ஒரு பைத்தியக்காரக் குரங்கு போல, ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாவுகிறது என்று நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். நீங்கள் அமிர்தானந்தமயியையும் சென்று பார்ப்பது உங்களுக்கு நல்லது. அப்பொழுது எந்த ஆசிரமம் உங்களுக்கு மிகவும் பொருத்தமானது என்பதை நீங்கள் சரியாகத் தெரிந்து கொள்வீர்கள்." நாங்கள் நேர்காணல் அறையிலிருந்து வெளியே வந்தோம்.

என் மொழிப்பெயர்ப்பாளர் அசாதரணமான எதையும் கவனித்ததாகத் தெரியாததாலும், இவ்வளவு அற்புதமான விஷயத்தை அவரிடம் சொல்லத் தயங்கியதாலும், என் அனுபவத்தைப் பற்றி அமைதியாக இருந்து, அந்தச் சிறப்பான தருணத்தை என் இதயத்திலேயே வைத்துக் கொள்ள விரும்பினேன்.

அடுத்த இரண்டு, மூன்று நாட்களுக்கு கேரளாவில் உள்ள மாதா அமிர்தான்நதமயியின் ஆசிரமத்திற்கு சென்று அவரைப் பார்க்க வேண்டும் என்று சுவாமியின் ஆலோசனையை என் மொழிப்பெயர்ப்பாளர் எனக்கு நினைவூட்டிக் கொண்டேயிருந்தார். சுவாமி பிரேமானந்தா நான் அவருடன் இங்கேயே தங்குவது பற்றிய தனது கருத்தை தெளிவாகக் கூறியிருந்ததால், அது உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்குமா என்று நான் இன்னும் சந்தேகத்துடனேயே இருந்தேன்.

நான்கு நாட்கள் கடந்தன. கடைசியில் கேரளாவுக்குச் செல்ல வேண்டாம் என்று நான் முடிவு செய்திருந்தபோது, நாற்பது வயது மதிக்கத்தக்க அமெரிக்கரான பத்மநாபன் என்பவர் சுவாமி பிரேமானந்தாவை முதன் முறையாகச் சந்திக்க வந்தார். அவர் சில ஆண்டுகளாகத் தங்கியிருந்த அமிர்தானந்தமயி ஆசிரமத்திற்குத் திரும்பத் தயாராகிக் கொண்டிருந்தபோது, நாங்கள் இருவரும் ஒன்றாக அங்கு செல்வதற்காக, என் மொழிப்பெயர்ப்பாளர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார். எனக்கு அறிமுகமில்லாத இடத்திற்கு என்னை அழைத்துச் செல்ல அனுப்பப்பட்ட ஒரு சிறப்புத் தூதராக அவரைப் பார்த்த நான், அவருடன் செல்ல முடிவு செய்தேன். (…)

## என் குருவின் சர்வஞானம் குறித்த எனது முதல் அனுபவங்கள்

(…) குறிப்பிட்ட சில நாட்களில், எங்கள் குரு அனைத்து பக்தர்களுக்கும் ஆசிரமவாசிகளுக்கும் ஒரு விசேஷ உணவைத் தானே தயாரிப்பார். சமையலறைக்குச் சென்று சில உதவியாளர்களை வைத்துக் கொண்டு, சரியான காய்கறிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை வெட்டுவார், உருளைக்கிழங்கை தோலுரிப்பார், வெங்காயத்தை நறுக்குவார், மற்றும் குழம்புகளை தயாரிப்பார். அவர் எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்துக்கொள்வார். சாதாரண காய்கறிகளுக்கு அசாதரண சுவையையும் தோற்றத்தையும் எப்படி அளிப்பது என்று தெரிந்த ஒரு சிறந்த சமையல்காரராக அவர் இருந்தார். அவர் எங்களுக்கு வழங்கிய அந்த உணவு உண்மையாகவே 'தெய்வீகப் பிரசாதமாக' இருந்தது.

ஒருநாள், உணவு மிகவும் சுவையாக இருந்ததால், நான் சாப்பிட வேண்டிய அளவை விட அதிகமாகச் சாப்பிட்டு விட்டேன். என் வயிறு அவ்வளவு உப்பிப் போனது. ஒரு சின்னப் பறவையைப் போல, நான் மூச்சுவிடும் ஒவ்வொரு முறையும் என் பக்கவாட்டுகள் விரிந்தன. சாப்பிட்ட பிறகு என் அறைக்குச் சென்று கழிப்பறைக்கு ஓடி வலுக்கட்டாயமாக வாந்தி எடுக்க முயற்சித்தேன். அது என் வயிற்றுக்கு நிம்மதி அளித்ததுடன் என்னால் ஓரளவுக்கு எளிதாக மூச்சு விட முடிந்தது.

அடுத்த நாள் காலை பூஜை மண்டபத்தில் நடந்த உரையின் தலைப்பு 'பொறுமை'. "நீங்கள் மெதுவாக, ஆனால் உறுதியாக உங்கள் சொந்த வேகத்தில் முன்னேற வேண்டும்." என்று சுவாமி கூறினார். "ஒரு பச்சிளங்குழந்தைக்கு திட உணவைக் கொடுக்க முடியாதது போலவே, ஒரு சிறு குழந்தையை நேரடியாக நடுநிலைப்பள்ளியில் சேர்க்க முடியாது – முதலில் அவர்கள் மழலையர் பள்ளிக்குச் செல்ல வேண்டும். ஒரு குழந்தை சற்றுப் பெரியதாகும் வரை, முதலில் கூழ் போன்ற உணவுகளையே சாப்பிட வேண்டும். பொறுமை இல்லாமல் ஆன்மிகம் இல்லை. சிலர் எல்லாவற்றையும் அவசர, அவசரமாகச் செய்ய விரும்பி எல்லாவற்றையும் அடைய விரும்பி கடவுளை உடனடியாகக் காண விரும்பி, அங்கும் இங்கும் ஓடுவதைப் பார்க்கிறேன் ஆனால், அத்தியாவசியமானவற்றை உள்வாங்கிக் கொள்ள மறந்து விடுகிறார்கள். நம்மால் தாங்க முடியாத பாரத்தைச் சுமப்பது நம்மை வீழ்த்தி விடும்."

பிறகு அவர் திடீரென்று என் திசையை நோக்கிப் பார்த்தார், "உதாரணமாக, யாராவது தங்கள் வயிறு கொள்ளும் அளவை விட அதிகமாகச் சாப்பிட்டால் என்ன நடக்கும்? சரி, அவரால் சுவாசிக்க முடியாது. நன்றாக சுவாசிப்பதற்காக வாந்தி எடுப்பதற்காக கழிப்பறைக்கு ஓட வேண்டியிருக்கும், இல்லையா?" அந்த உதாரணத்தில் என்னையே கண்டுகொண்ட நான், தரையில் புதைந்து விட வேண்டும் என்று விரும்பினேன். அதேசமயம் மற்ற அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

நான் இன்னும் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தபோது, சமையல்காரர்களில் ஒருவர், அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த அரிசிப் பைகளைத் தொடர்ந்து சேதப்படுத்திய எலிகளை ஒழிப்பதற்காகக் கிடங்கில் விஷம் வைக்கும்படி என்னிடம் கேட்டார். நான் அவ்வாறே செய்வதாக உறுதியளித்தேன். ஆனால் அதை எப்போது எப்படிச் செய்வேன் என்று அவரிடம் சொல்லத் தவறி விட்டேன். மூன்று நாட்களுக்குப் பிறகு நான் கொஞ்சம் விஷம் வாங்கி, அதைச் சமைத்த சாதத்துடன் கலந்து. ஒரு காகிதத்தில் வைத்து அரிசிப் பைகளுக்கு இடையில் தரையில் வெவ்வேறு இடங்களில் வைத்தேன்.

மதியம் சற்று முன்னதாக, நான் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டேன். அங்கே, அன்று காலை நான் கிடங்கில் விஷம் வைத்தேனா என்று என்னிடம் கேட்கப்பட்டது. நான், "ஆம்" என்று பதிலளித்தபோது, அந்த நேரத்தில் ஆசிரமத்திலிருந்து 300 கி.மீ தொலைவில் இருந்த சுவாமி நான் வைத்திருந்த விஷம் கலந்த அரிசியை உடனடியாக அகற்றி விடுமாறு தொலைபேசியில் கூறியதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஏனென்றால், அங்கிருந்து சமையலறைக்கு அரிசி மூட்டைகளைச் சுமந்து செல்லும் சிறுவர்கள், தரையில் சிந்தியிருந்த பச்சரிசியை மென்று எடுத்து வாயில் போட விரும்புவார்கள் என்று அவர் கூறியிருந்தார். நான் விரைவாக ஓடிச் சென்று அவற்றை அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக எலிப் பொறிகளை வைத்தேன்.

பூஜை மண்டபத்தில் தனது உரைகளின் போது, சுவாமி மக்கள என்ன செய்து கொண்டிருந்தார்கள் அல்ல என்ன நினைத்து கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றி மிக விரிவாக விவரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் – ஆனால் மிகவும் விவேகத்துடன். அவர் எங்கள் உரையாடல்கள் மற்றும் செயல்கள் அனைத்திற்கும் ஆசிரமத்திலும் அதன் எல்லைகளுக்கு அப்பாலும் நடந்த அனைத்து சிறிய நிகழ்வுகளுக்கும் கண்ணுக்குத் தெரியாத சாட்சியாக இருந்தார். எதுவும் அவரை விட்டுத் தப்பிக்கவில்லை. அவருடைய உணர்வு எங்கும் நிறைந்திருந்தது.

வேறு இடங்களில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி அவர் எங்களிடம் கூறுவார். அவற்றை நாங்கள் பின்னர் சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்வோம். இந்த முதல் அனுபவங்கள், அவருடைய சர்வஞானத்தைப் பற்றி எனக்கு ஒரு மேலோட்டமான புரிதலை அளித்தன. பாரிஸ் விமான நிலையத்தில் என் நண்பன் லேம்பர்ட் இது குறித்து என்னை எச்சரித்தது மிகவும் சரியாக இருந்தது. என் ஆன்மிக

குருவுடன் நான் முதன்முறையாகப் பழகிய போது, அவருடைய ஆலோசனையின் பயனை நான் இப்போது உணரத் தொடங்கினேன். இனிமேல், நான் சிந்திக்கும், பேசும் அல்லது செய்யும் எல்லாவற்றிலும் நான் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தெய்வீக சக்திகள் கொண்ட ஒருவருடன் வாழ்வது ஒரு முன் எப்போதும் இல்லாத சாகசமாக இருந்தது. சுவாமிக்கு முன்னால் நாங்கள் ஒளிவு மறைவற்றவர்களாக இருந்தோம். அவரிடமிருந்து எதையும் மறைப்பது சாத்தியமற்றது. அது மிகச் சிறிய எண்ணமாக இருந்தாலும் சரி, மிகச் சிறிய நோக்கமாக இருந்தாலும் சரி. அவர் எல்லாவற்றையும் உடனடியாகக் கண்டறிந்து விடுவார் நாங்கள் அவருக்கு அருகில் இருந்தாலும் சரி, தொலைவில் இருந்தாலும் சரி, இது பொருந்தும். நாங்கள் எதையாவது சிந்திப்பதற்கு முன்போ அல்லது செயல்படுவதற்கு முன்போ அவர் அதை ஏற்கனவே அறிந்திருந்தார். அவரிடம் பொய் சொல்வது என்பது இயலாத காரியம். ஆனாலும் சிலர் முயற்சி செய்தார்கள் — ஆனால், இரண்டு மூன்று கேள்விகளிலேயே அம்பலப்பட்டுப் போனார்கள்.

எங்களைப் பற்றிய அனைத்தும் அவருக்குத் தெரிந்திருந்ததுஹ எங்கள் நல்ல குணங்கள், குறைகள், பலங்கள் மற்றும் பலவீனங்கள் என அனைத்தும் எங்களை நாங்களே அறிந்து கொண்டிருப்பதை விட அவர் எங்களை மிக நன்றாக அறிந்திருந்தார்! ஒவ்வொருவரின் மனதின் போக்குகளும் அவருக்குத் தெரிந்திருந்தன. அவர் முன்னிலையில் இருந்தாலும் சரி, அவரிடமிருந்து வெகு தொலைவில் இருந்தாலும் சரி, எங்களால் செய்ய முடிந்த சிறந்த காரியம், எங்கள் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் அனைத்தையும் உன்னிப்பாகக் கண்காணிப்பதுதான்.

“X இப்படி நினைக்கிறார் அல்லது Y அப்படிச் சொன்னார், அல்லது Z இதைச் செய்தார்” — இப்படி அவர் மக்களின் எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது செயல்களை வெளிப்படையாகக் கூறுவார். அது அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதை நீங்கள் உணர்நது கொள்வீர்கள். பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் வரை, அவரைச் சந்திப்பதற்கு முன்பு ஒவ்வொருவரும் என்ன சொன்னார்கள் அல்லத செய்தார்கள் என்பதை அவர் எங்களிடம் வெளிப்படுத்துவார். நகைச்சுவை உணர்வில் அவருக்கிருந்த அபாரத் திறமையால் அந்தத் தருணங்கள் பெரும்பாலும் மிகவும் வேடிக்கையாக இருக்கும்.

ஒருமுறை பூஜை மண்டபத்தில் ஒரு இளம் இத்தாலியர் தனது சொந்த நாட்டைச் சேர்ந்த பக்தரிகளின் குழுவினருக்காக சுவாமியின் வார்த்தைகளை மொழிப் பெயர்த்துக் கொண்டிருந்தார். “நான் சொல்வதை கவனமாகக் கேள்” என்று சுவாமி அவரை நேராகக் கண்களைப் பார்த்து கண்டிக்கும் தொனியில் கூறினார். “சரியாக மொழிப்பெயர்ப்பு செய். நீ ஒரு குறிப்பிட்ட வகை மரத்தை நட விரும்பும் தோட்டத்தை நோக்கி உன் மனம் ஓடும்போதெல்லாம், அதை நான் பிடித்து இழுக்க வேண்டிய நிலைக்கு என்னை ஆளாக்குகிறாய்.”

அதன் பிறகு, அந்த இளைஞன் எங்களிடம் சுவாமி சொன்னது முற்றிலும் சரியே என்று கூறினான். அவன் மொழிப்பெயர்த்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், தனது வீட்டின் முற்றத்தில் நட விரும்பிய பூக்கும் மரங்களைப் பற்றி அவன் சிந்தித்துக் கொண்டிருந்தானாம். சுவாமிக்கு இத்தாலிய மொழிப் பேசவோ, அல்லது புரிந்து கொள்ளவோ தெரியாத போதிலும், மொழிப்பெயர்பாளர் கவனச்சிதறலுடன் இருப்பதை உணர்ந்து, அவர் தனது வார்த்தைகளை தவறாக மொழிப்பெயர்ப்பதை அறிந்து கொண்டார்.

சில சமயங்களில், தவறான எண்ணம் கொண்ட அல்லது தீய நோக்கம் கொண்ட ஒருவரை அவர் சுட்டிக்காட்டுவார். சைகையால் உணர்த்துவார், அல்லது நேரடியாகவே அவரிடம் பேசுவார். ஆனால். அவர் விஷயங்களை தணிக்கை செய்யும் அல்லது தலையிடும் ஒரு ‘சிந்தனைக் காவலர்’ போன்றவர்

அல்ல. மனசாட்சிக்குச் சுதந்திரம் அளிக்க அவர் அறிந்திருந்தார். மேலும் மிகவும் அவசியம் என்று கருதியபோது மட்டுமே தலையிட்டார்.

ஒரு உண்மையான குருவாக, அவர் அனைவரையும் சுதந்திரமாக வாழவும், அவரவர் சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளவும் அனுமதித்தார். யாராவது ஒரு இரகசியத்தை அவரிடம் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்தால், அதை அவர் அறிந்து கொண்டு, அந்த நபரின் தனிப்பட்ட உரிமையை மதித்தார். அது ஒரு தீவிரமான பிரச்சினையாக இருந்தால், அவர் அமைதியாக அவர்களுக்கு உதவுவார். ஒரு பக்தரின் ஆன்மிக வளர்ச்சிக்கு ஏதேனும் தடையாக இருந்து, அந்த பக்தர் அதை அவரிடம் சொல்லாதபோது, அந்த நபர் தன்னிடம் மனம் திறந்து பேசும்படி தூண்டும் ஒரு சூழ்நிலையை சுவாமி உருவாக்குவார்.

வெயிலிலிருந்து சுவாமிக்கு நிழல் கொடுப்பதற்காக குடையுடன் எப்போதும் அவருக்குப் பக்கத்திலேயே நடந்து செல்லும் ஒரு இளம் பக்தர் ஒரு முறை என்னிடம் கூறினார், “நான் சுவாமியுடன் நடக்கும் போது, சில சமயங்களில் அவர் ஆதரவிற்காகவும் சமநிலைக்காகவும் என் கையைப் பிடித்துக் கொள்வார். மேலும் ஆச்சரியப்படும் விதமாக என் மனதில் ஒரு தூய்மையற்ற எண்ணம் வரும்போதெல்லாம், அவர் உடனடியாக என் கையை விட்டு, விட்டு என்னை விலக்கி தள்ளி விடுவார். அல்லது என்னிடமிருந்து விலகிச் சென்று விடுவார்.

பிறகு என் மனதின் ஓரத்தில் இருந்ததை வெளிப்படுத்தி என்னை ஆச்சரியப்படுத்துவார். உதாரணமாக, “ஆ! மறுபடியும் அதே பெண்ணைப் பற்றித்தான் யோசிக்கிறாயா?” என்று கூறி எனக்கு அறிவுரைகள் வழங்குவார். அல்லது என்னைக் கண்டிப்பார். என் மனதில் என்ன இருக்கிறது என்பதை அவர் உடனடியாக கண்டுபிடித்து அதை என்னிடம் வெளிப்படையாகச் சொல்லி விடுவார்.”

சுவாமி தனது தெய்வீக சக்திகளால் எங்களைக் கவனிக்கும்போது, அவர் என்ன உருவத்தை எடுத்திருப்பார் என்று நான் சில சமயங்களில் வியந்ததுண்டு அது காற்றைப் போலவா அல்லது ஒரு நிழலுருவம் போலவா?

ஒருமுறை ஒரு உரையாடலின் போது நான் அவரிடம், “குருதேவா நாங்கள் உங்களை ஒரு மகா மனிதராகப் பார்ப்பது போலவே, பறவைகளும் உங்களை ஒரு பெரிய பறவையாகப் பார்க்கின்றனவா?” என்று கேட்டேன். அந்தக் கேள்வி அவரைப் புன்னகைக்க வைத்தது. எனக்கு நேரடியாகப் பதிலளிக்காமல், தான் பார்ப்பது போலப் பொருட்களைப் பார்க்க விரும்பினால், என் ஆன்மிக வளர்ச்சியில் முன்னேறும்படி அவர் என்னை ஊக்குவித்தார்.

மற்றொரு சமயம் அவர் எங்களிடம், “நான் உங்களைப் போன்றவன்தான், ஆனால் கடவுளை நேரடியாகக் காணும் ஆற்றல் எனக்கிருக்கிறது. உங்கள் நன்மைக்காகவே நான் ஒரு மனிதனாக அவதாரம் எடுத்திருக்கிறேன். உங்களைப் போலவே பேசுகிறேன், செயல்படுகிறேன். ஆனால் என் எண்ணங்களும் புரிதல்களும் நீங்கள் கற்பனை செய்ய முடியாத ஒரு உயர் மட்டத்தில் இருக்கின்றன.” என்று கூறினார்.

அவருக்கு எல்லா இடங்களிலும் கண்களும் காதுகளும் இருந்ததால், அவர் யாரையும் மறப்பதில்லை. மேலும் ஒவ்வொருவருக்கும் என்ன தேவை என்பதைத் துல்லியமாக அறிந்திருந்தார். அவர் அளித்த மிகச் சிறிய வாக்குறுதிகளைக் கூட நினைவில் வைத்துக் கொண்டு, எவ்வளவு காலம் ஆனாலும் நம்பிக்கை இழந்தவர்களின் பெரும் ஆச்சரியத்திற்கு மத்தியில், அவற்றை எப்போதும் நிறைவேற்றினார்.

இத்தகைய பரிபூரண குரு வாழும் ஓர் ஆசிரமத்தில் பெரியதோ, சிறியதோ நடக்கும் எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. அவருடைய தெய்வீக சக்திகள் மிக எளியவை முதல் மிகவும் சிக்கலானவை வரை அனைத்து வகையான சூழ்நிலைகளையும் உருவாக்க அவருக்கு உதவுகின்றன. அவர் அனைத்து நிகழ்வுகளுக்கும் கண்ணுக்குப் புலப்படாத மூலமாக இருக்கிறார். அத்தகைய நிகழ்வுகளை அவர் உருவாக்குவதன் நோக்கம், சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் அவருடைய சீடர்களும் பக்தர்களும் நேர்மையுடனும் தைரியத்துடனும் செயல்பட வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதே ஆகும்.

சுவாமியின் சோதனைகளும் போதனைகளும் அப்படித்தான் இருந்தன. அவை ஏராளம்! அவருடைய போதனைகளின் பெரும்பகுதி இதையே வலியுறுத்தியதுஹ "நான் ஒருவரை பக்தராகவோ, அல்லது சீடராகவோ ஏற்றுக் கொள்ளும்போது, அவர்களின் ஆன்மிக வழிகாட்டுதலுக்கும் அத்துடன் அவர்களின் கர்மங்களுக்கும் முழுப்பொறுப்பையும் நானே ஏற்றுக் கொள்கிறேன. நான் அவர்களைச் சோதிக்கிறேன். ஆனாலும் பலர் அதை உணர்வதே இல்லை. பாருங்கள், ஆன்மிகக் கருத்துக்களை தொடர்ந்து போதிப்பதில் பயனில்லை.

மக்கள் அவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். பிறகு மறந்து விடுகிறார்கள். அவர்கள் சில கொள்கைகளை மனப்பாடம் செய்யலாம். ஆனாலும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எந்த மாற்றமும் செய்யாமல் அப்படியே வாழ்வார்கள். என் மாணவர்கள் ஆன்மிகத்தை நடைமுறைப் பயிற்சியின் மூலம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்தப் பாதை சற்றுக் கடினமானதுதான், ஆனால் அதன்விளைவு அசாதாரணமானதாகவும் நீடித்ததாகவும் இருக்கும்."

ஆன்மிகப் போதனையில் புதிதாக எதுவும் இல்லை. கற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தும் ஏற்கனவே மற்றவர்களால் கூறப்பட்டு விட்டது. அப்படியிருக்க நான் ஏன் அவர்களின் ஞானத்துடன் மேலும் எதையாவது சேர்க்க வேண்டும்? என் வழமுறை என்னவென்றால், என் சீடர்களையும் பக்தர்களையும் பின்பற்றுபவர்களையும் பிரச்சினைகள், தூண்டுதல்கள், சிரமங்கள் மற்றும் எரிச்சல்களை எதிர்கொள்ளும்படி தொடர்ந்து தூண்டுவதுதான். அதன் மூலம் அவர்கள் தாங்களாகவே கற்றுக் கொள்வார்கள்.

அவர்களுக்கு தெய்வீகத்தின் மீது மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வு இருந்தால், அவர்கள் இயல்பாகவே சரியான திசையில் வழிநடத்தப்படுவார்கள். அவர்கள் கற்றுக் கொள்ளத் தவறினால், அதே சவாலை மீண்டும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இந்தச் சோதனைகளையும் பிரச்சினைகளையும் கொடுப்பது நான் அல்ல அது அந்தத் தெய்வீக சக்தியேதான்.

என் செல்வாக்கு வட்டத்திற்குள் ஒருவர் வருகிறார் என்றால், அவர் சில பிரச்சினைகளை எதிர்கொள்கிறார் என்று அர்த்தம். இந்தச் சோதனைகளை எத்தனை பேரால் கடந்து வர முடிகிறது? அந்தச் சவால்களைப் பணிவுடன் கடந்து வருபவர்கள் ஆன்மிகப் பாதையில் வேகமாக முன்னேறுவார்கள். கஷ்டங்கள் உங்களை மேலும் வலிமையாக்கும் ஒரு வரமாக நினையுங்கள்.

இவ்வாறு, அவருடைய போதனைகள் அன்றாட நாடகங்கள், திட்டமிடப்படாத சம்பவங்கள், பாத்திரமேற்று நடித்தல், மற்றும் தெய்வீக லீலைகளைக் கொண்டிருந்தன.

அவற்றை வாழந்து பார்ப்பது அவருடைய தெய்வீகத் தன்மையை எங்களுக்கு உணர்த்தியது. வியக்க வைக்கும் முடிவுகளைக் கொண்ட காட்சிகளை நான் கண்டேன். எங்கள் ஆசிரமவாசிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சம்பவத்திலும் தத்தமது பாத்திரங்களை ஏற்று நடித்தனர் அந்தச் சம்பவங்களுக்கு எங்கள் குருவே கண்ணுக்குத் தெரியாத தூண்டுதலாக இருந்தார். விமர்சனம், அற்பப் பொய்கள், புறங்கூறல், கோபம், ஏமாற்றுதல் மற்றும் பொறாமை ஆகியவை எங்களில்

ஒவ்வொருவரிடமும் தெளிவாக்க காணப்பட்டன. அத்தகைய குறைகள் அனைத்தும் — ஒரு தெளிவான வெளிச்சம் பாய்ச்சவும், தன் பக்தர்களுக்கு ஒரு பாடம் புகட்டவும் மிகைப்படுத்தப்பட்டு — பின்னர் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டன.

முன்னேற்றம் காண்பதற்காக, அனைவரும் தங்கள் கெட்டப் பழக்கங்களை விட்டு விட வேண்டும் என்று அவர் ஊக்குவித்தார். “நீங்கள் ஒரு மனிதராக இருந்தால், மற்றவர்கள் மீது பொறாமைப்படவோ அல்லது கோபப்படவோ கூடாது. அகங்காரம் இல்லாமல், பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். அனைவரிடமும் அன்பாகவும் வரவேற்கும் மனப்பான்மையுடனும் இருக்க வேண்டும். மற்றவர்களின் தவறுகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். மற்றவர்களை விமர்சிக்காதீர்கள் அவர்களைத் தூண்டிவிடாதீர்கள். இந்த வழியில் உங்களால் நடந்து கொள்ள முடிந்தால், நீங்கள் ஒரு உண்மையான மனிதர் என்று நான் சொல்வேன்.”

## இளைஞர் சங்கச் செய்திகள்...

Premananda International Youth

## இலங்கையில் நவராத்திரி விழா





*செப்டெம்பர் 22 முதல் அக்டோபர் 2 வரை இலங்கை இளைஞர் குழுவினர் நவராத்திரி விழாவினை களிப்புடனும் ஆவலுடனும் பாரம்பரிய முறையில் கொண்டாடினார்கள். ஒரு மண் படுகையில் நவதானியங்களை விதைத்து அதன் நடுவில் ஒரு கும்பத்தை வைத்து விழாவினைத் தொடங்கி, ஒவ்வொரு நாளும், இளம் பக்தர்கள் ஒன்றாகக் கூடி அம்பாளுக்கு அபிஷேகம் செய்தார்கள்.*

ஒவ்வொரு மாதமும் பிரேமானந்தா இளைஞர் சங்கத்தினரின் சிறப்புப் பண்பொன்றினை முன்னிலைப்படுத்தி வருகிறோம்.

இம்மாதம்:

# உங்களைப் புரிந்து கொள்வது, அதன் மூலம் மற்றவர்களைப் புரிந்து கொள்வது

தவறான புரிதல்களே பெரும்பாலும் பிரிவுகளுக்குக் காரணமாக அமைகின்றன. உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். “நான் ஏன் பிறந்தேன், என் பிறப்பின் நோக்கம் என்ன, என் வாழ்க்கையின் இரகசியம் என்ன?” இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் புரிதலைப் பெறுவீர்கள். உங்களை நீங்கள் எவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக மற்றவர்களையும் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் புரிந்து கொள்வீர்கள். இந்தப் புரிதலின் மூலம் நீங்கள் ஒருவருக்கொருவர், உங்களுக்கும் இறைவனுக்கும் நெருக்கமாக வருவீர்கள்.

